**சூரியவெவ பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சூரியவெவ பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் இறுதியில் திரண்ட நிதியத்திலும் பற்றாக்குறைக் கணக்கிலும் மீதி ரூபா 11,872,890 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின்படி அது ரூபா 10,043,576 ஆனமையால் ரூபா 1,829,314 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) ஆண்டின் இறுதியில் வாடகைக் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 1,385,911 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் படி அது ரூபா 1,145,600 ஆனமையால் ரூபா 240,311 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்கின் வைப்பு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. வேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கணக்கில் ரூபா 15,588,004 தொகையொன்று செலவும் வரவும் வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக நாட்குறிப்புப் பதிவுகள் இடப்பட்டிருக்கவில்லை.

ii. நாட்குறிப்பு இலக்கம் 34 இன் மூலம் ரூபா 4,710,019 தொகையொன்று வேலைக் கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக பிரதான பேரேட்டில் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 14 இன் மூலம் ரூபா 1,205,216 தொகை வேலைக் கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக பிரதான பேரேட்டில் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

iii. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைக் கடன்பட்டோரின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படாதிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டிற்குரிய கூட்டுப்பசளை செயற்திட்டத்தின் வேலியை அமைப்பதற்காக 2013 பெப்ரவரி 05 ஆந் திகதி கிடைத்த ரூபா 925,897 தொகையொன்று கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

iv. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரினதும் கடன்பட்டோரினதும் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட, 2013 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படாத மற்றும் மீளளிக்கப்படாத ரூபா 2,498,647 பெறுமதியான 05 வேலைகளுக்குரியதாக மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோரினதும் கடன்பட்டோரினதும் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதற்கான காரணம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

v. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைக் கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படாதிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 488,559 கூட்டுத்தொகையானது வேலைக் கடன்கொடுத்தோரில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

vi. 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோரினதும் கடன்பட்டோரினதும் கீழ் காண்பிக்கப்பட்ட 05 நிர்மாணங்களுக்குரிய பெறுமதி 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டுவரும் போது ரூபா 234,810 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் அந்த வேறுபாட்டிற்கான காரண விடயங்களைக் காண்பித்து கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vii. மகநெகும 2012 இன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 18 நிர்மாணங்களுக்காக ரூபா 9,502,757 தொகை கடன்கொடுத்தோரினதும் கடன்பட்டோரினதும் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வேலைகளுக்காக ரூபா 9,295,098 தொகையானது மீளாய்வாண்டின் போது கிடைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் படி மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 207,659 தொகை கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மகநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட ரூபா 13,308,418 தொகையான 27 வேலைகளின் பெறுமதி மூலதன வருமானமாகவும் மூலதனச் செலவினமொன்றாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டண கணக்கு வைத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

i. 2012 ஆம் ஆண்டின் மே முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய மொத்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,721,315 ஆகும். இந்த மாதங்களுக்குரிய 2013 ஆகஸ்ட் 18 ஆந் திகதி ரூபா 1,278,715 தொகையொன்று கிடைத்திருந்ததுடன் மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 442,600 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் கணக்குளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. 2013 ஏப்ரல், மே, யூன் மற்றும் யூலை மாதங்களுக்குரிய எம்பிலிபிட்டி நீதிமன்றத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய ரூபா 41,083 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

iii. ஆண்டின் ஆரம்பத்தில் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 27,500 தொகை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரியதாக ரூபா 133,800 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டணம் கிடைத்திருந்தது. இந்தப் பணம் வருமானக் கடன்பட்டோரில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் குறைத்து ஒதுக்கப்பட்ட ரூபா 106,300 கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

iv. முத்திரைக் கட்டணக் கோவையின் படி மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்குரிய கிடைக்கவேண்டிய ரூபா 56,500 கூட்டுத்தொகையான முத்திரைக் கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆண்டின் ஆரம்பத்தில் நிதிக்கூற்றுக்களின் படி நிலையான வைப்புக் கணக்குகளின் பெறுமதி ரூபா 5,419,263 ஆக இருந்த போதிலும் பிரதான பேரேட்டில் பேரேட்டுக் கணக்கில் அது ரூபா 4,000,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு மீதிகளுக்கிடையே வேறுபாடு ரூபா 1,419,263 தொகை நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 17 இன் மூலம் முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் திரண்ட நிதியத்தில் சீராக்கமாக காண்பிக்கப்பட்டு அந்தத் தொகை நிலையான வைப்பு முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த வட்டி வருமானம் முன்னைய ஆண்டுகளின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் ஒரு தடவை இந்த ஆண்டின் போது பெறப்பட்ட வருமானத்திற்கு எடுக்கப்பட்டமையால் திரண்ட நிதியம் அதிகரித்திருந்தது.

(எ) அறிவித்தல் பதாதைக் கட்டண வருமானத்தைக் கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. 2013 பெப்ரவரி 11 ஆந் திகதிய 11981 ஆம் இலக்க அடியிதழில் 2012 ஆம் ஆண்டிற்குரிய அறிவித்தல் பதாதைக் கட்டணமாக தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 223,782 தொகை கிடைத்திருந்தது. இந்தத் தொகை 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாதிருந்த போதிலும் வருமானக் கடன்பட்டோரில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

ii. ஆண்டின் போது அறிவித்தல் பதாதைக் கட்டணமாக ரூபா 603,913 தொகை கிடைத்திருந்ததுடன் இந்த மொத்தத் தொகையும் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு எடுக்காது ரூபா 72,513 தொகை மாத்திரம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 531,400 தொகை கடன்பட்டோரில் செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய அறிவித்தல் பதாதைக் கட்டணமாக ரூபா 557,700 கூட்டுத்தொகையொன்று காணப்பட்டதுடன் அது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டுகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 231,282 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) நூலகப் புத்தகக் கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைத்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 220,453 ஆக இருந்த போதிலும் ஆண்டின் சொத்தின் கீழ் ரூபா 3,730 தொகை மாத்திரமே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ii. மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 203,360 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் பெறுமதி மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. 2014 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது வைப்புச் செய்யப்பட்ட ரூபா 581,113 நிர்மாண நிறுத்தி வைத்தல் பணம், பிழையாக மீளாய்வாண்டின் இறுதியில் நிறுத்தி வைத்தல் வைப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 1,048,981 பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

ii. நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 11 இன் மூலம் பட்டோலை மற்றும் கணக்குகளுக்கிடையேயான வேறுபாடு சீராக்கமாகக் காண்பிக்கப்பட்டு ரூபா 632,581 தொகையொன்று நிறுத்தி வைத்தல் கணக்கில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான பேரேட்டில் பேணப்பட்ட இந்த இரண்டு கணக்குகளிலும் ரூபா 632,581 தொகை வீதம் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் வரவுப் பதிவு இடப்பட்டிருக்கவில்லை.

iii. நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 12 இன் மூலம் பட்டோலைகள் மற்றும் கணக்குகளுக்கிடையே ஏற்பட்டுள்ள வேறுபாடுகளின் சீராக்கமாகக் காண்பித்து ரூபா 88,500 தொகை கேள்வி வைப்புக் கணக்கில் வரவு வைத்து திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான பேரேட்டில்

பேணப்பட்ட இந்த இரண்டு கணக்குகளிலும் ரூபா 88,500 வீதம் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் வரவுப் பதிவு இடப்பட்டிருக்கவில்லை.

iv. ஊழியர் பிணை வைப்பிற்காக ஆண்டின் இறுதி வரையில் கிடைத்த ரூபா 111,056 தொகையான வட்டிப் பணம், ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை ஊழியர் பிணை பொறுப்புக் கணக்கில் செலவு வைக்கப்படாது ஊழியர் பிணை வட்டிக் கணக்காக காண்பித்து வேறொரு கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை ஐந்தொகையில் சொத்துக்களின் கீழ் வரவு மீதியாகக் காண்பித்து முதலீடுகளில் சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

v. நிதிக்கூற்றுக்களின் படி ஆண்டின் இறுதியில் ஊழியர் பிணை வைப்பு முதலீட்டுக் கணக்கின் பெறுமதி ரூபா 411,685 ஆக இருந்த போதிலும் ஊழியர் பிணை வைப்பு பொறுப்புக் கணக்கின் பெறுமதி ரூபா 337,057 அகும். அதன் படி இந்த இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 74,628 தொகை வேறுபாடு காணப்பட்டது. நிதிக்கூற்றுக்களின்படி ஊழியர் பிணை வைப்பு பொறுப்புக் கணக்கில் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 235,888 தொகையான செலவு மீதியொன்று காணப்பட்ட போதிலும் பிரதான பேரேட்டில் பேணப்பட்டிருந்த ஊழியர் பிணை வைப்புக் கணக்கில் ஆண்டின் ஆரம்பத்தில் செலவு மீதி ரூபா 245,957 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 10,069 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

vi. பெறுமதிசேர் வரிக் கணக்கில் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 24,309 செலவு மீதியொன்று காணப்பட்டதுடன் இது பிரதான பேரேட்டில் பேணப்பட்ட பெறுமதிசேர் வரிக் கணக்கில் சீராக்கும் போது ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 24,399 வரவு மீதியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஓ) சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ஒரே தடவையில் பணமாகக் கிடைத்த ரூபா 235,650 கூட்டுத்தொகையான பணம் மூலதன வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாது 5/22 வாடகை வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஔ) நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடக்கூடிய பயன்பாட்டுச் சேவைகளின் கீழ் நிலுவை வருமானமாக ரூபா 1,385,912 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பதிவேட்டின் படி ஆண்டின் இறுதியில் நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,729,712 ஆக இருந்தது. அதன்படி நிலுவை வருமானம் ரூபா 343,800 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(க) காகிதாதிகள் மற்றும் மின் உபகரண இருப்புக்களை கணக்கு வைத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 28 இன் மூலம் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 170,632 தொகையான மின் உபகரணங்களின் இருப்பின் பெறுமதி வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் (503) வரவு வைத்து கையிலுள்ளதை மின் உபகரண இருப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்தது. பிரதான பேரேட்டில் பேணப்பட்ட வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் (503) இந்தத் தொகை வரவு வைப்பதற்குப் பதிலாக பிழையாக செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் கையிலுள்ள மின் உபகரண இருப்புக் கணக்கில் செலவு வைத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. ஆண்டின் இறுதியில் எஞ்சிய மின் உபகரண இருப்பின் பெறுமதி ரூபா 111,582 தொகை மின் உபகரண இருப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும் வழங்கல் மற்றும் உபகரணக் கணக்கில் (503) செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கீடு செய்வதற்காக நாட்குறிப்புப் பதிவுகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பேரேட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை அதற்குரிய பதிவேடுகளில் பதியப்பட்ட எண்ணிக்கைகளுடன் இணக்கஞ் செய்யப்படாத பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்ததாகக் காண்பிக்கப்பட்டு ரூபா 6,571,165 கூட்டுத்தொகையானது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு கடன்கொடுத்தோர் கணக்கு, வேலைக் கடன்பட்டோர் கணக்கு மற்றும் பொதுக் கடன்பட்டோர் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,366,361 கூட்டுத்தொகையொன்று நிறுத்தி வைத்தல் வைப்பு,கேள்வி வைப்பு, பாதுகாப்பு பிணை வைப்பு மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுக் கணக்கு

வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. திரண்ட நிதியத்தில் வைக்கப்பட்ட இந்த வரவு மற்றும் செலவு வைப்பிற்குரிய பட்டோலைகள் அல்லது விபரம் மற்றும் விளக்கங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்தக் கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,445,876 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம ரூபா 5,396,253 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 1,502 | 1,237 | 36 |
| ii. | வாடகை | 17,116 | 9,883 | 1,693 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 862 | 215 | 4 |
| iv. | ஏனைய வருமானம் | 13,570 | 12,416 | 2,520 |

#### 2.2.2 ஆதன வரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பிரதேசமாக கருதப்படுகின்ற பிரதேசத்தில் அமைந்துள்ள ஆதனங்களிலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனவரி மதிப்பிடப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 வாராந்த சந்தை மற்றும் மீன் சந்தைக் கடைகளை வாடகைக்கு விடல்

(அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 இன் படி சூரியவெவ வாராந்த சந்தை மற்றும் மீன் கடைகள் மற்றும் வெளிவெல்ஆர வாராந்த சந்தைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இந்த வாராந்த சந்தை மற்றும் மீன் கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக பின்வரும் அடிப்படையில் கூறுவிலைகள் பெறப்பட்டிருந்தன.

| விண்ணப்பதாரரின் பெயர் | விண்ணப்பப் படிவம் சபைக்கு கிடைத்த திகதி | விண்ணப்பித்த தொகை | ஏனைய விடயங்கள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| திருமதி. டீ. எப். நில்மினி | 2013.01.02 | 8,000,000 | ஆண்டிற்காக |
| திரு.டபிள்யூ.பீ. சந்திரசேன | 2013.01.09 | 9,100,000 | பெப்ரவரி முதல் 11 மாதங்களுக்காக |
| திரு. ஏ.பீ.டீ. றுவன் குமார | 2013.01.09 | 7,300,000 | - மேற்படி - |
| திரு. என். எச். எஸ். அஜித் சியாமல் | 2013.01.09 | 8,300,000 | - மேற்படி - |

* வாராந்த சந்தை மற்றும் மீன் கடைகளை மேற்கூறப்பட்டதன் படி விண்ணப்பத்திருந்த விண்ணப்பதாரர்களினது விண்ணப்பபடிவங்களை சபைக்குச் சமர்ப்பித்து சபை தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* மேற்கூறப்பட்ட விண்ணப்பங்களின்படி 2013 பெப்ரவரி மாதம் முதல் வாடகைக்கு எடுப்பதற்காக திரு. டபிள்யூ.பீ. சந்திரசேன இனால் ரூபா 9,100,000 தொகையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் தரகு செலுத்தும் அடிப்படையில் 2013 பெப்ரவரி முதல் திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 7,791,260 ஆக இருந்தது. அதில் தரகாக ரூபா 1,366,882 தொகையொன்று வாடகை சேகரித்தவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி இந்த வாராந்த சந்தை மற்றும் மீன் கடைகள் கேள்விகோரி வாடகைக்கு வழங்க முடியாமையினால் சபைக்கு ரூபா 2,675,622 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**2.2.4 இறைச்சிக் கடை வாடகை**

மீளாய்வாண்டிற்காக சபையின் பன்றி இறைச்சிக் கடையை வாடகைக்கு விட்டிருந்த வாடகையாளரினால் வாடகைப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாதிருந்ததுடன் ரூபா 11,125 தொகை செலுத்தாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இந்த நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 சூரியவெவ வாராந்த சந்தையில் 26 கடைகளை வாடகைக்கு விடல்**

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகின்ற தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின்படி சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 கடைகளுக்குரிய உடன்படிக்கை அல்லது கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 05 கடைகளுக்குரிய உடன்படிக்கையின்படி மாதாந்த வாடகை ரூபா 100 ஆக இருந்த போதிலும் தற்போது அறவிடப்படுகின்ற மாதாந்த வாடகை ரூபா 275 ஆக இருந்ததுடன் ஏனைய 21 கடைகளுக்குரிய உடன்படிக்கைகளில் மாதாந்த வாடகை எவ்வளவு எனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 332,675 கூட்டுத்தொகையொன்று 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2013 மே 23 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின்படி மாதாந்த வாடகை ரூபா 1,000 ஆக இருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கையின் படி கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படுகின்ற தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் படி ஒரே தடவையில் சேருகின்ற பணம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபையின் மூலம் கடை உரிமையாளர்களுக்கு 2008 திசெம்பர் 23 ஆந் திகதி வழங்கப்பட்ட கடிதத்தின்படி ஒரே தடவையில் சேருகின்ற பண நிலுவையை 12 மாதாந்த தவணைகளில் செலுத்தித் தீர்க்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒரே தடவையில் சேரும் பணமான ரூபா 444,509 கூட்டுத்தொகையொன்று அறவிடுவதற்கு இருந்தது. அந்தப் பணத்தை அறவீடு செய்தல் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சூரியவெவ வாராந்த சந்தை வளவில் 2013 நவம்பர் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 02 இடங்களில் பதிவுசெய்யப்பட்ட 26 கடைகளுக்கு மேலதிகமாக 02 நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இவ்வாறான நிர்மாணங்களுக்கு இடமளிப்பதற்காக சபை அங்கீகாரமொன்று பெறப்பட்டிருக்கவில்லை. சபை முறையான உடன்படிக்கை கைச்சாத்திட்டு அந்தக் கடைகளிலிருந்து வாடகைப் பணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 சூரியவெவ வாராந்த சந்தையில் 07 கடைகளை வாடகைக்கு வழங்குதல்**

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 173 ஆம் பிரிவின் படி வாடகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் மேற்கூறப்பட்ட 07 கடைகளின் வாடகையாளர்களுடன் உடன்படிக்கை செய்வதற்கு கணக்காய்வுத் திகதியான 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. ரூபா 28,200 கூட்டுத்தொகையொன்று 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. 06 மற்றும் 07 ஆம் இலக்க கடைகளை வாடகைக்குப் பெற்ற வாடகையாளரின் பெயர் அல்லது நிலுவை மீதி தொடர்பாக பதிவேட்டில் குறிப்பிடப்படாமையினால் அந்த 02 கடைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iv. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2013 மே 23 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் படி திருத்தப்பட்ட மாதாந்த வாடகை ரூபா 750 ஆக இருந்த போதிலும் அந்தக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

v. உடன்படிக்கையின்றி மேற்கூறப்பட்ட கடைகளுக்காக கணக்காய்வுத் திகதியான 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 925,952 தொகையான ஒரே தடவையில் சேகரிக்கப்படும் பணமாக அறவிடவேண்டியிருந்ததுடன் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 சூரியவெவ வாராந்த சந்தையின் 12 கடைகளை வாடகைக்கு வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கை நாளதுவரையாக்கப்படாமை மற்றும் நிலுவைக் கடை வாடகை அறவிடப்படாமை

உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின்படி சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் இந்த 12 கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ரூபா 2,400 கூட்டுத்தொகையானது 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய மதிப்பீட்டுக் கட்டணம் அறவிடப்படாமை

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2013 மே 23 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின்படி மாதாந்த வாடகை ரூபா 600 ஆக இருந்த போதிலும் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கட்டணம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள 08 கடைகளை வாடகைக்கு விடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின்படி சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த 08 கடைகளுக்காக இறுதியாக 2008 திசெம்பர் 29 ஆந் திகதியே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

ii. ரூபா 104,900 கூட்டுத்தொகையான ஒரே தடவையில் சேரும் பணமாக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிடவேண்டியிருந்த போதிலும் அந்தப் பணத்தை அறவிடல் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2008 திசெம்பர் 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு ரூபா 3,000 வீதம் 42 மாதாந்த தவணைகளில் செலுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iii. கடைகளிலிருந்து ஆண்டின் இறுதியில் ரூபா 12,900 கூட்டுத்தொகையான வாடகையொன்று நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை வாடகைப் பணத்தை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 ஏனைய வருமானம்

2013 யூலை முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 117,456 கூடுடுத்தொகையான வீதி விளக்குகள் மீளளிப்பு வருமானம் மின்சார சபையிலிருந்து அறவிடவேண்டியிருந்தது.

### 2.2.9 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் ரூபா 2,402,795 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

2013 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்காக ரூபா 1,768,000 பெறுமதியான 31 வேலை முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்த வேலை முன்மொழிவுகளில் 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரையில் ரூபா 280,000 தொகையான 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பிரதேச சபையினால் 06 நாட்கூலி நியமங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் 2011 பெப்ரவரி 24 ஆந் திதிய 02/2011 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் படி அரசாங்க ஊழியர் சேமலாப நிதிய நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஊழியர் சேமலாப நிதிய நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென்மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 1991 செப்தெம்பர் 02 ஆந் திகதிய 91/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் படி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கடமைப் பிரயாணங்களுக்காக தலைவருக்கு இணைந்த படிகள் செலுத்த முடியாத போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கடமைப் பிரயாணங்களுக்காக ரூபா 31,750 கூட்டுத்தொகையான இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

### 3.4 விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய மன்றத்தின் நடமாடும் நூலகமொன்றை நடாத்திச் செல்வதற்காக ரூபா 156,874 பெறுமதியான 24 உபகரணங்கள் 2007 ஒக்தோபர் மாதத்தின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்துதடன் நடமாடும் நூலகம் 2009 திசெம்பர் மாதம் வரையும் பேணப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் மாதம் 22 ஆந் திகதி வரையிலும் அந்த உபகரணங்கள் வினைத்திறனான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. ஆசிய மன்றத்திலிருந்து நன்கொடையாக 2132 புத்தகங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2009 திசெம்பர் மாதத்தின் பின்னர் வாசகர்களுக்கு புத்தக விநியோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பலவருட காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்ட பெறுமதி கண்டறிய முடியாத 05 பொருள் வகைகளுக்குரிய 127 அலகு குழாய்க்கிணறு உபகரணங்களை கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்குரிய LE – 7476 ஆம் இலக்க கெப் வாகனம் மற்றும் 270 – 0523 ஆம் இலக்க உழவு இயந்திரம் என்பன செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இனங்காணப்பட்ட நட்டம்**

உத்தேச கூட்டுப்பசளை செயற்திட்டத்தில் வலை வேலி நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களிலிருந்து 25 விடயங்கள் தொலைந்து போயிருந்ததுடன் அவற்றின் மீள் கொள்வனவுக் கிரயம் ரூபா 101,500 ஆகும். இந்த நட்டத்திற்கு பொறுப்புவாய்ந்த 4 தரப்பினர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் தொலைந்துபோன பொருட்களின் பெறுமதி கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 ஒப்பந்த நிருவாகம்**

(அ) பிரதேச சபைக் கட்டிட நிர்மாணம்

2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிர்மாணம் 03 கட்டங்களின் கீழ் 03 மதிப்பீடுகள் தயாரித்து மூன்று ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கி ரூபா 13,088,834 கூட்டுத்தொகையான செலவினமொன்று 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரை செலவிடப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கட்டிடத்தின் வரவேற்பறையை அமைப்பதற்காக 08 கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 376,275 தொகையான செலவினமொன்று செலவிடப்பட்டிருந்தது. இந்த 08 தூண்களிலும் முகடுகளை அமைப்பதற்காக 06 தூண்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இரண்டு தூண்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. சரியான திட்டமின்றி நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையால் 02 கொங்கிரீட் தூண்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 94,074 தொகையான செலவினம் பயனற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

(ii) கட்டிட நிர்மாணம் கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டமையினால் இரண்டாவது கட்டத்தின் போது நிறைவேற்றப்பட்ட பின்வரும் வேலைப் பகுதிகள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்ததுடன் அந்த வேலைப் பகுதிகள் மீண்டும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது.

(iii) கட்டிடத்தில் collumes, beam, slab ஒவ்வொன்றிலும் வெள்ளை பூசுவதற்காக ரூபா 216,268 தொகையான செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 21 ஆந் தகிதிய பௌதீக பரிசோதனையின் போது கறுப்புப் பூஞ்சனம் பிடித்து பழுதடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iv) உள்ளேயும் வெளியேயும் நிறப்பூச்சுக்களுக்காக ரூபா 190,843 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மூன்றாவது கட்டத்தின் நிர்மாணங்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமையினால் பூசப்பட்ட வர்ணங்கள் பழுதடைந்தும் அலங்கோலமாகவும் இருந்தன.

(v) ஒரு வருட உத்தரவாதக் காலத்துடன் CFL மின் குமிழ்களுடன் Pendent lamp வழங்கி பொருத்துவதற்காக 56 அலகுகளுக்கு ரூபா 99,120 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 நவம்பர் 21 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது மின் குமிழ் பொருத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் மின்சாரம் வழங்கப்படாதிருந்ததுடன் அவ்வாறிருக்கும் போது CFL மின் குமிழ் வழங்கியதற்காக கொடுப்பனவு செய்தலின் தேவை என்ன என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) கட்டிடத்தின் மேல்மாடியில் முகட்டிற்கிடையே பூச்சுக்கள் இடைக்கிடையே கழன்றிருந்தன.

(vii) வேலை பூர்த்திசெய்யப்பட்ட முதலாவது மாடியை சுத்தமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கட்டிடத்தின் உள்ளே அதிகளவான கழிவுகள் காணப்பட்டன.

(viii) 2006 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சூரியவெவ நகரில் புதிதாக 04 கடைகளை நிர்மாணித்தல்

சபை நிதியத்தைப் பயன்படுத்தி இரண்டு கடைகள் வீதம் 04 கடைகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2010 திசெம்பர் 09 ஆந் திகதி ரூபா 3,796,298 கூட்டுத்தொகையான உடன்படிக்கையிடப்பட்ட தொகையில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தச் சங்கத்தினால் ரூபா 1,419,128 தொகையான வேலைப்பகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,277,216 தொகையொன்று சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,789,160 தொகையான வேலைப்பகுதி நிறைவேற்றுவதற்கு காணப்பட்டது. கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 21 ஆந் திகதி வரையிலும் இந்த கடைகளின் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்காக சபையினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்ததுடன் கடைகள் நிர்மாணிக்கப்பட்ட இடம் புற்கள் வளர்ந்திருந்தது.

### 3.7 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பிரதேச சபையினால் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக நிலத்தைத் தெரிவு செய்தல் மற்றும் வலை வேலி நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வேலி நிர்மாணிப்பதற்காக 2011 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 1,065,900 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டு பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு 2014 ஏப்ரல் 25 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் கடன் நிர்வாகம்
(உ) வாகன நிர்வாகம்